(Regd. No. 69/79)

மகளிர் சுய உதவிக்குழு
புத்துணர்ச்சி இதழ்

# ஐ.வி.டி.பி மலர்

மொட்டு 20 மலர் 48 ( தனிச்சுற்றுக்கு மட்டும் ) அக்டோபர் 2024 – மார்ச் 2025



**2024 - ஆம் ஆண்டு மறைந்த சுய உதவிக்குழு உறுப்பினர்களின் 1330 வாரிசுதாரர்கள் பெற்ற**

# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

## ரூ.7.30 கோடி



# இயக்குநர்

## இதயத்திலிருந்து

அன்புள்ளம் கொண்ட
உறுப்பினர்களே,
பணியாளர்களே
அனைவருக்கும்
*வணக்கங்களும்,*
*வாழ்த்துக்களும்...*

ஐ.வி.டி. பி நிறுவனமும், நமது குழுக்களும், மேலும் ஒரு நிதியாண்டை கடந்து வந்துள்ளோம். நமது குழுக்களையும், அதன் நிதி பரிமாற்றங்களையும் தணிக்கைக்கு உட்படுத்தியுள்ளோம். தணிக்கை என்பது நமது கடந்த கால செயல்பாடுகளைச் சீர்தூக்கி, ஆய்வு செய்து நமது நிதிச் சேவைகள் முறையாக வழங்கப்பட்டுள்ளனவா என நாமும், நம் வங்கியாளர்களும் அறிந்து கொள்வதற்கே.

இத் தணிக்கைகள் நம் குழுக்களின் நம்பகத் தன்மையை மேம்படுத்தி கொள்ள பயன்படுகிறதே தவிர, குறை கண்டுபிடிப்பதற்கல்ல என்பதை உணர்ந்து, தணிக்கைக்கு உங்களின் மேலான ஒத்துழைப்பை நல்க வேண்டுகிறேன்.

இவ்வாண்டு வங்கிக் கடனாக **ரூ. 1212.83 கோடியும்,** சங்கக் கடனாக **ரூ.350.49 கோடியும்** ஐ.வி.டி.பி கடனாக **ரூ.74.80 கோடியும்** என மொத்தம் **ரூ.1638.12** கோடியை நமது உறுப்பினர்கள் கடனாக பெற்று பயனடைந்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும் இவ்வாண்டில் ஐ.வி.டி.பி உறுப்பினர்களின் மருத்துவச் சிகிச்சைகளுக்காகவும், மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையாகவும், பிற மனித நேயப்பணிகளுக்காகவும் **ரூ. 17.16 கோடியை** ஐ.வி.டி.பி செலவிட்டுள்ளது. இதுவரை மனித நேயப்பணிகளுக்காக **ரூ. 161.15 கோடியை** செலவிட்டுள்ளோம் என்பதை மகிழ்வுடன் குறிப்பிட விழைகிறேன்.

நம் சுய உதவிக்குழு உறுப்பினர்களிடையே புற்றுநோயை முற்றிலும் ஒழிக்க, ஆரம்ப நிலையிலேயே புற்று நோயை கண்டறிந்து சிகிச்சையளிக்கும் ஐ.வி.டி.பி-யின் திட்டம் சிறப்பாக நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் இன்னும் அதிகமான உறுப்பினர்கள் பங்கேற்று தங்களை பரிசோதனைகளுக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டுகிறேன். மேலும் இத்திட்டத்தின் அடுத்த கட்டமாக, நம் உறுப்பினர்களின் திருமணமாகாத பெண் குழந்தைகளில் மார்பக, கருப்பை பிரச்சனை உள்ளவர்களுக்கும் இலவச சிகிச்சை அளிக்கும் திட்டத்தை துவங்கியுள்ளோம்.

மேலும் கிருஷ்ணகிரி நகரில் இயங்கிவரும் நமது தொழிற்பயிற்சி மையத்தில் விரைவில் கணினிப் பயிற்சி மையத்தை ஐ.வி.டி.பி நிறுவனம் துவங்க உள்ளது என்பதையும் மகிழ்வோடு தெரிவித்துக்கொள்கிறேன். இப்பயிற்சி மையம் நம் உறுப்பினர்களும் அவர்களின் பெண் குழந்தைகளும் கணினிப் பயிற்சி பெற்று அது தொடர்பான வேலை வாய்ப்பு பெறவும் பேருதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

இறுதியாக ஐ.வி.டி. பி நிறுவனம் உங்கள் வாயிலாக மகளிர் மேம்பாட்டிற்காகவும், அவர்களின் பொருளாதார உயர்விற்காகவும் செயல்படுத்தி வரும் திட்டங்கள் இலக்கு மக்களை சென்றடைவதில் உங்களின் அர்ப்பணிப்பும், பணிகளும் எவ்வாறு உள்ளது என சீர்தூக்கி பார்க்க அன்புடன் வேண்டுகிறேன். உங்களின் பணியைச் செம்மையுடனும், நேர்மையுடனும் மேற்கொள்ள மீண்டும், மீண்டும் வலியுறுத்துகிறேன். இப்பண்புகள் நம் பணித்தளத்தில் மட்டுமல்ல, நம் தனிப்பட்ட வாழ்விற்கும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில் நேர்மையான ஒரு தனிமனிதர் தான் ஒரு பண்பட்ட சமுதாயத்தை உருவாக்க முடியும். எனவே ஐ.வி.டி. பி யின் அனைத்து முயற்சிகளுக்கும் உங்களின் ஆக்கப்பூர்வமான பங்களிப்பை வழங்குங்கள். அப்போது தான் அனைவரும் மாற்றத்தை நோக்கி வீறுநடை போடுவோம் என்பது எனது உறுதியான நம்பிக்கை.

*நன்றி*

என்றும் உங்களில் ஒருவனாக
குழந்தை
பிரான்சிஸ்
நிறுவனர் - தலைவர்

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களின் 2024 ஆம் ஆண்டிற்கான

# இலாபப் பங்கீடு

## ரூ.86.41 கோடி



ஐ.வி.டி.பி நிறுவனத்தின் கீழ் **15384** மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் ஒவ்வொரு கூட்டத்திலும் ஒரு குறிப்பிட்ட தொகையினைச் சேமித்து வருகின்றனர். அங்ஙனம் சேமித்தத் தொகைக்கு ஏற்றவாறு குறைந்த வட்டியில் உள்கடனைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். அந்த கடனிற்கு குழுவிற்கு செலுத்திய வட்டியானது குறிப்பிட்ட கால இடைவெளியில் குழு உறுப்பினர்களுக்கு இலாபமாகப் பங்கிடப்படுகிறது. அங்ஙனம் 2024 ஆம் ஆண்டில் **5820** குழுக்களிலுள்ள **98,940** உறுப்பினர்கள் இலாபப் பங்கீடாக **ரூ. 86.41 கோடியைப்** பெற்று பயனடைந்துள்ளனர்.

உபரிச் சேமிப்பு மற்றும் இலாபப் பங்கீடு பெறும் மொத்தக் குழுக்கள் **5820**

| உபரிச் சேமிப்பு | இலாபப் பங்கீடு | மொத்தம் |
|---|---|---|
| ₹120.74 கோடி | ₹86.41 கோடி | ₹207.15 கோடி |

இதுவரை உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு **₹1005.41 கோடி**

## மறைந்த ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் 1330 வாரிசுதாரர்களுக்கு

# வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி

**ரூ.7.30 கோடி**

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் நலன்களுக்காக செயல்படுத்தி வரும் திட்டங்களில் முதன்மையானது வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கும் திட்டமாகும். இத்திட்டத்தின்படி பல்வேறு காரணங்களால் எதிர்பாராமல் மரணமடையும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா **ரூ.50,000/-**மும், விபத்தினால் நிரந்தர உடல் ஊனமுற்றோருக்கு தலா **ரூ.25,000/-**மும், வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கப்படுகிறது. மேலும் உறுப்பினர்கள் மரணமடையும் போது அவர்களின் ஈமச் சடங்கிற்காக குழு நிதியிலிருந்து **ரூ.5000/-** உடனடியாக வழங்கப்படுகிறது.





**புனித அன்னாள் பள்ளி** வளாகத்தில் 16.03.2025 அன்று நடைபெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கும் விழாவிற்கு கிருஷ்ணகிரி உட்கோட்ட **காவல் துணை கண்காணிப்பாளர் திரு. முரளி** அவர்கள் தலைமையேற்க, நம்மை விட்டு பிரிந்த **1330** உறுப்பினர்களுக்கு மௌன அஞ்சலியும், மலரஞ்சலியும் செலுத்தப்பட்டது. சுண்டம்பட்டி பவுண்டன் நிறுவன இயக்குநர் **அருட்பணி. அலெக்ஸ்** அஞ்சலி செய்தி வழங்க, ஐ.வி.டி. பி நிறுவனத் தலைவர் **இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் முன்னிலையில் மறைந்த உறுப்பினர்களின் **1330 வாரிசுதாரர்களுக்கு ரூ. 6.65 கோடி** வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாகவும், அவர்களின் ஈமச்சசடங்கிற்காக தலா. **ரூ.5000** என **ரூ. 65 இலட்சம்** என மொத்தம் **ரூ. 7.30 கோடி** வழங்கப்பட்டது.

**இத்திட்டம் துவங்கப்பட்ட 2001 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை மறைந்த 13439 உறுப்பினர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூ.68.43 கோடியை ஐ.வி.டி.பி நிறுவனம் வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியாக வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.**

## விதவை உறுப்பினர்களின் 313 குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

**ரூ. 39.12 இலட்சம்**




ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களில் கணவரை இழந்து மிகவும் ஏழ்மை நிலையில் வாழும் உறுப்பினர்களுக்காக இக்கல்வி உதவித் தொகை திட்டத்தை ஐ.வி.டி.பி நிறுவனம் நடைமுறைப்படுத்தியுள்ளது.

அதன்படி ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களிலுள்ள விதவை உறுப்பினர்களின் **313 குழந்தைகளுக்கு** தலா **ரூ.12,500/-** என மொத்தம் **ரூ.39.12 இலட்சத்தை** கல்வி உதவித்தொகையாக வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

**இத்திட்டத்தின் கீழ் இதுவரை வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகை** **ரூ. 3.26 கோடி**

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு தையற்பயிற்சி மற்றும் ஆரி வேலைபாடு சிறப்பு பயிற்சி வகுப்புகள்

**ரூ. 3.49 இலட்சம்**

ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் தொழில் திறனை மேம்படுத்தும் விதமாக ஐ.வி.டி.பி நிறுவனத்தின் தொழிற்பயிற்சி மையத்தில் இதுவரை பல கட்டங்களாக நடைபெற்ற தையற்பயிற்சிகளில் 587 பேரும் ஆரி வேலைப்பாடுகள் பயிற்சியில் 255 பேரும் என மொத்தம் 842 பேர் தையற்கலை தொழிற்பயிற்சி பெற்று பயனடைந்துள்ளனர் இப்பயிற்சி வகுப்புகளுக்காக **2024-25** ஆண்டு ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை **ரூ. 3.49 இலட்சம்.**



**இதுவரை தையற் பயிற்சிகளுக்காக செலவிடப்பட்ட தொகை ரூ.8.33 இலட்சம்**



## ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கான நலப் பணிகள்

**ரூ. 47.78 இலட்சம்**

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம், சமூக அக்கறையோடு மக்கள் பணியாற்றுவதில் பெரும்பங்கு வகிப்பதைப் போன்று, தம் பணியாளர்கள் நலனிலும் மிகுந்த ஈடுபாட்டோடு விளங்குவது குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் பொங்கல் விழா, தீபாவளி, புத்தாண்டு விழா, சீருடை, பணியாளர்கள் குடும்பத்தில் நிகழும் ஈமச்சடங்கு என ஒவ்வொரு நிகழ்விலும் அவர்களுக்கு தேவையான நல உதவிகளை வழங்கி வருகிறது. அதன்படி கடந்த 6 மாதங்களில் **502** பணியாளர்களுக்கு **ரூ.47.78** இலட்சம் மதிப்பிலான நல உதவிகளை வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

**தீபாவளி பண்டிகை பரிசுகள்**
ரூ.17,16,570

**புத்தாண்டு பரிசுகள்**
ரூ.3,30,980

**புதுமனை புகுவிழா பரிசுகள்**
ரூ.4,08,300

**பொங்கல் பண்டிகை பரிசுகள்**
ரூ.16,22,975

**பணியாளர்களுக்கான சீருடைகள்**
ரூ.2,57,402

**இனிப்புகள் மற்றும் கேக்குகள்**
ரூ.3,42,280

**பணியாளர்களின் குடும்ப உறுப்பினர்கள் இறப்பின் போது ஈமச்சடங்கு நிதி 5 பேருக்கு**
ரூ.1,00,000




**இதுவரை பணியாளர்களின் நலனுக்காக ஐ.வி.டி.பி செலவிட்ட மொத்தத் தொகை**

**ரூ.9.75 கோடி.**

# ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சைத் திட்டம்



பெங்களூர் **செயின்ட் ஜான்ஸ்** மருத்துவக் கல்லூரி இயக்குநர், **புனித லூயிஸ்** மருத்துவமனை பொறுப்பாளர்களோடு, ஐ.வி.டி.பி தலைவர் நடத்திய புற்று நோய் பரிசோதனை மற்றும் சிகிச்சை குறித்த மீளாய்வு கூட்டம்.

1. ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்றுநோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்றுநோய் மருத்துவச் சிகிச்சை திட்டமானது நாட்டின் சிறந்த மருத்துவமனைகளில் ஒன்றான **பெங்களூர் செயின்ட் ஜான்ஸ்** மருத்துவமனையின் வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

2. உயிர்க்கொல்லி நோயான புற்றுநோய் ஒரு குடும்பத்தையே புரட்டிப் போடக் கூடியது. அந்நோய் வந்தால் குடும்ப பொருளாதாரத்திற்கும் உயிருக்கும் உத்திரவாதம் இல்லை என்பது நாம் அறிந்ததே. புற்று நோய் இல்லா மகளிர் வாழ்வு மலர ஐ.வி.டி.பி நிறுவனத்தால் உருவாக்கப்ட்ட திட்டமே ஐ.வி.டி.பி. உறுப்பினர்களுக்கான ஆரம்பநிலை புற்று நோய் கண்டறிதல் மற்றும் இலவச புற்று நோய் மருத்துவச் சிகிச்சை திட்டமாகும்.

3. இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு புற்றுநோய் அறிகுறிகள் இருப்பதை ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து அதற்குரிய சரியான சிகிச்சையை உரிய நேரத்தில் அளித்து உறுப்பினரை புற்று நோயிலிருந்து காப்பாற்றுவதே ஆகும்.

4. இத்திட்டம் துவங்கப்பட்ட 2 ஆண்டுகள் கடந்த நிலையில் ஆரம்ப நிலை புற்று நோய் பரிசோதனை மேற்கொள்ள உறுப்பினர்களைக் கட்டாயப்படுத்தும் சூழ்நிலை நிலவுகிறது. ஆரம்ப நிலையிலேயே தங்களை பரிசோதித்து கொள்ளாமல் நோய் முற்றிய நிலையில் சிகிச்சைக்கு வரும் நிலையை தவிர்க்க வேண்டும்.

5. புற்று நோய் தொடர்பான பரிசோதனை மற்றும் சிகிச்சைகள் குறித்து உறுப்பினர்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால் உடனடியாக ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொள்ளவும்.

## பரிசோதனைக்கு வருபவர்கள் கவனத்தில் கொள்ள வேண்டியவை :

- உறுப்பினர் குழுவில் சேர்ந்து 3 வருடம் முடிவடைந்திருக்க வேண்டும்.
- பரிசோதனைக்கு வரும்போது ஆதார் அட்டை மற்றும் குழுவின் தனிநபர் சேமிப்பு புத்தகம் கொண்டு வருவது அவசியம்.
- கர்ப்பப்பை நீக்கியவர்களாக இருந்தாலும் மார்பகத்தில் ஏதேனும் மாறுபாடு காணப்பட்டால் உடனடியாக ஐ.வி.டி.பி தலைமை அலுவலத்தை அணுகவும்.
- பரிசோதனைக்கு வரும்போது சேலை அணிந்து வரவும்.
- பரிசோதனைமுகாமில் கலந்து கொள்பவர்கள் 60 வயதிற்கு உட்பட்டவர்களாக இருப்பது அவசியம்.
- ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறியும் முகாம் அனைத்து வேலை நாட்களிலும் கிருஷ்ணகிரி **புனித லூயிஸ் மருத்துவமனையில்** நடைபெற்று வருகிறது. இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி உடனடியாக அனைவரும் பரிசோதனை முகாமில் கலந்துக் கொண்டு தங்களைப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ளவும்.

## மருத்துவ உயர் சிகிச்சையில் கலந்துகொள்பவர்களின் கவனத்திற்கு

- புற்றுநோய் மருத்துவ உயர் சிகிச்சை பெங்களூர் **செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில்** வழங்கப்படுகிறது. அறுவைச் சிகிச்சை, கதிரியக்க சிகிச்சை, மருந்து மற்றும் ஆய்வகச் செலவுகள் அனைத்தும் ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்றுக்கொள்கிறது.
- சிகிச்சையின் போது நோயாளிக்கும் உடன் தங்குவோர்க்கும் மருத்துவமனையிலேயே, இலவச உணவு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- சிகிச்சைப் பெறும் உறுப்பினர் குழுவிற்கு தொடர்ந்து வருபவராக இருக்க வேண்டும்.
- சிகிச்சைக்கு வரும் போதும், சிகிச்சை முடிந்த பின்னரும் குழுவில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்.
- சிகிச்சை பெறவிருக்கும் உறுப்பினருக்கு குழுவில் எவ்வித Overdue or late payment இருக்கக் கூடாது.
- உறுப்பினர்களிடம் முதல் நிலை மற்றும் இரண்டாம் நிலை புற்றுநோய் காணப்பட்டால் சிகிச்சை அளிப்பது எளிது. நோயும் விரைவில் குணமடையும். உறுப்பினரால் சிகிச்சையைத் தாங்கிக் கொள்ள உடலில் வலு இருக்கும்.
- அதே சமயம் சிகிச்சையை இடையிலேயே நிறுத்தினால் தொடர்ந்து ஐ.வி.டி.பி நிறுவனத்தால் சிகிச்சைஅளிக்க இயலாது.
- ஒவ்வொரு முறை **பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனைக்கு** செல்லும் போதும் ஐ.வி.டி.பி நிறுவனத்தைத் தொடர்பு கொண்டு அனுமதி கடிதம் பெற்றுச் செல்வது அவசியம்.

## ஜனவரி 2023 முதல் மார்ச் 2025 வரை பரிசோதனை முகாமில் பங்கேற்று, அனைத்து நிலைகளிலும் சிகிச்சைப் பெற்றவர்களின் விவரம்

ஆரம்பநிலை புற்றுநோய் பரிசோதனை செய்து கொண்டவர்களின் எண்ணிக்கை : 22,688
HPV POSITIVE கண்டறியப்பட்டவர்கள் எண்ணிக்கை : 1550
COLPOSCOPY சிகிச்சை மேற்கொண்டோர் : 1177
HYSTECTOMY (கர்ப்பப்பை அகற்றுதல்) சிகிச்சைப் பெற்றோர் : 101
THERMALABLATION, CONE BIOPSY சிகிச்சைப் பெற்றவர்கள் : 152
மார்பகப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டோர் : 13350
மார்பக Mammogram,FNAC பரிசோதனை மேற்கொண்டோர் : 412
மார்பகப் புற்றுநோய் அறுவைச் சிகிச்சை மேற்கொண்டோர் : 58
கதிரியக்க & கீமோதெரபி (Chemotherapy) சிகிச்சைப் பெற்றோர் : 72
PET SCAN எடுத்தவர்கள் : 74
GENITIC TEST மேற்கொண்டோர் : 10
ABDOMEN மற்றும் BREAST SCAN எடுத்தவர்கள் : 1492
புற்றுநோய் அல்லாத பொது சிகிச்சைப் பெற்றோர் 48
தைராய்டு கட்டி நீக்கும் சிகிச்சைப் பெற்றோர் : 15
உறுப்பினர்களின் பெண் குழந்தைகள் சிகிச்சைப் பெற்றோர் எண்ணிக்கை : 13

| விவரம் | 2023-2024 | ஏப்ரல் 2024 முதல் மார்ச் 2025 வரை | மொத்தம் | |
|---|---|---|---|---|
| ஆரம்ப நிலை புற்றுநோய் பரிசோதனை | ரூ.1.61 கோடி | ரூ.1.57 கோடி | ரூ.3.18 கோடி | ரூ. 7.46 கோடி |
| புற்று நோய் உயர் சிகிச்சை | ரூ.1.00 கோடி | ரூ.3.28 கோடி | ரூ.4.28 கோடி | |


நீ கட்ட வேண்டியது உன் வெற்றிக்கான பாலம் தான், உன் வெற்றியை தடுக்கும் சுவர் அல்ல.

## ஐ.வி.டி.பி- யின் புதிய மருத்துவத் திட்டம்

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் திருமணம் ஆகாத பெண் குழந்தைகளுக்கு மார்பகம் மற்றும் கருப்பையில் ஏதேனும் கட்டிகள் அல்லது வேறு பிற அறிகுறிகள் காணப்படும் போது ஐ.வி.டி.பி நிறுவனத்தை அணுகினால் அவர்களுக்கு நோயின் தன்மைக்கேற்ப இலவசச் சிகிச்சை வழங்கப்படும்.

ஐ.வி.டி.பி உறுப்பினர்களில் 50 வயதிற்கு குறைவாக உள்ள உறுப்பினர்களுக்கு உதடுபிளவு, தீ விபத்து மற்றும் பிற காரணங்களால் முகத்தில் ஏதாவது குறைபாடு இருப்பின் ஐ.வி.டி.பி நிறுவனம் மூலம் இலவச முகச் சீரமைப்பு சிகிச்சை அளிக்கப்படும்.

## புற்றுநோய் சிகிச்சைக்கு இரத்ததானம் வழங்கிய கல்லூரி மாணவர்களுக்கு ஊக்கப்பரிசாகப் LENOVO புத்தகப் பைகள்

ரூ. 55 ஆயிரம்



புற்றுநோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனையின் மூலம், உயர்சிகிச்சைப் பெறும் உறுப்பினர்களின் சிகிச்சைக்கு தேவையான இரத்தத்தை வழங்க, திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியைச் சார்ந்த 110 மாணவர்களும், தருமபுரி தொன்போஸ்கோ கல்லூரியைச் சேர்ந்த 150 மாணவர்களும் தாங்களே முன்வந்து இரத்ததானம் செய்துள்ளனர்.



மாணவர்களிடையே தன்னார்வ ரத்ததானத்தை ஊக்குவிக்கும் நோக்கில், தன்னார்வத்துடன் ரத்ததானம் செய்த கல்லூரி மாணவர்களுக்கு புத்தகப் பைகளை வழங்கி ஊக்குவித்தது ஐ.வி.டி.பி நிறுவனம்.

தற்போது புற்றுநோய் சிகிச்சை பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகமாகிக் கொண்டே வருவதால், இனிவரும் காலங்களில் அறுவைச் சிகிச்சைக்கு தேவையான இரத்ததானத்தை சிகிச்சைப் பெறும் உறுப்பினரின் நெருங்கிய உறவினர்கள் வழங்கவேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.




ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்

இராமன் மகசேசே

திரு. குழந்தை பிரான்சிஸ்

அவர்களுக்கு

SBI

RBO VELLORE

ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா

வழங்கிய

## Women Empowerment & Rural Development Award

விருது வழங்கியவர்

திரு. M.V.R. முரளி கிருஷ்ணா

பொது மேலாளர் - NW1, சென்னை வட்டாரம்

நாள்: 24.02.2025

பாஞ்சாலியூர் திருநங்கையருக்கு ரூ. 1.52 இலட்சம்

# பொங்கல் பரிசு

கிருஷ்ணகிரி, பாஞ்சாலியூரில் வசிக்கும் 67 திருநங்கையர்கள் பொங்கல் பண்டிகையை சிறப்பிக்கும் பொருட்டு தலா ரூ. 2270/- என மொத்தம் ரூ. 1.52 இலட்சம் மதிப்பிலான 25 கிலோ அரிசி மற்றும் உணவுப்பொருள் தொகுப்பினை வழங்கி உதவியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



இதுவரை திருநங்கைகளுக்கு ஐ.வி.டி.பி வழங்கிய மொத்தத் தொகை

ரூ. 4.86 இலட்சம்

# ஐ.வி.டி.பி ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்களின் முக்கிய கவனத்திற்கு

- ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு ஊக்குநர்கள் அனைவரும் தனித்திறன் வாய்ந்தவர்களாக செயல்படுவதில் வல்லவர்கள். ஆகவே தங்களது குழுவைத் தாங்களே எவ்வாறு திறம்பட வழிநடத்த வேண்டும் என்பதை வலியுறுத்துவதற்காகவே இவ்வாண்டு நோட்டீஸ், தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு ஆகியவை வடிவமைத்து கொடுக்கப்பட்டுள்ளன.

- **ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்படும் நோட்டீஸ், தீர்மானப்புத்தகம், ஊக்குநர் கையேடு போன்ற ஆவணங்கள் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு மற்றும் உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக மட்டுமே வழங்கப்படுகிறது. இந்த ஆவணங்களை மற்ற வெளியாட்கள் பயன்படுத்த அனுமதிப்பது சட்டப்படி குற்றமாகும். இந்த செயற்பாட்டைத் தவிர்க்கவும்**

## 2025 - 2026 ஆம் ஆண்டு தீர்மானப் புத்தகத்தில் உள்ளடங்கியுள்ள புதிய சாராம்சங்கள்

1. **தணிக்கை முடிவுகளின் அடிப்படையில் குழு மற்றும் ஊக்குநருக்கான தரநிலைகள் (Grading)** ஊக்குநரின் பொறுப்புகள் மற்றும் சிறந்த குழுக்களாக செயல்படுவதற்கான வழிமுறைகளை உள்ளடக்கியதாகும். அதை உணர்ந்து ஊக்குநர்கள் அனைத்து பணிகளையும் உடனுக்குடன் முடிக்க அறிவுறுத்தப்படுகிறது.
2. **குழுக்களின் தனிநபர் சேமிப்பு மற்றும் கடன்களை உறுதிப்படுத்துவதற்கான தனிப்பக்கங்கள்.**
3. **உள்தணிக்கை பக்கங்கள் :** உள்தணிக்கை பக்கங்களில் ஒவ்வொரு 3 மாத வரவு, செலவுகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்தி செய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களை உடனுக்குடன் சரி செய்யலாம்.
4. **Acquitance Verification : Acquitance** பக்கங்களில் ஒவ்வொரு பணப்பரிவர்த்தனைகளின் போதும், சுகாதாரப் பொருட்கள் பெற்றுக் கொள்ளும் போதும் கையொப்பமிட்டு கைரேகை பதிவு செய்தல் அவசியம்.பொருள் பெற்றுக் கொண்டதற்கான படிவங்களை சரியாக பூர்த்தி செய்வதன் மூலம் குழுக்களில் ஏற்படும் குழப்பங்களைத் தவிர்க்கலாம்.
5. **Bank loan closing தீர்மானம் :** மினிட்டில் வங்கிக் கடன் **closing** ற்கென ஒதுக்கப்பட்ட பக்கத்தின் தீர்மானம் மற்றும் வழிமுறையினைப் பின்பற்றும் போது, உறுப்பினர்களிடம் தேவையின்றி அதிகமாக வசூலிக்கும் சூழ்நிலையைத் தவிர்க்கலாம்.
6. **Bank loan Appraisal தீர்மானம் :** இப்பக்கத்தில் ஊக்குநர் உட்பட குழுவை சேர்ந்த யாரும் எழுதக் கூடாது. **Appraisal** வருபவர்கள் மட்டுமே பயன்படுத்த வேண்டும்.
7. **IVDP loan மீதங்கள் சரிபார்க்கும் வழிமுறைகள் :** இப்பக்கத்தில் உள்ள தகவல்களின் அடிப்படையில் ஐ.வி.டி.பி கடன் குறித்த விவரங்களை ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் நேரடியாக தலைமை அலுவலகத்தைத் தொடர்புக் கொண்டு அறிந்துக் கொள்ளலாம்.
8. **வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி பங்களிப்பு நிதியை மாற்றம் செய்வதற்கான தீர்மானம் :** இப்பக்கத்தில் உள்ள தீர்மானத்தை முறையாக பயன்படுத்தினால் பழைய உறுப்பினர் மற்றும் புதிய உறுப்பினரின் எண்ணிக்கைக்கு தகுந்தவாறு சரியான பாதுகாப்பு நிதி தொகையை ஐ.வி.டி.பி யின் கண்காணிப்பு மற்றும் மேற்பார்வை கணக்கிற்கு மாற்றம் செய்ய முடியும்.
9. **பயிற்சிக்கென ஒதுக்கப்பட்ட பகுதி :** இப்பக்கத்தில் பயிற்சியின் போது கொடுக்கப்படும் தகவல்கள் மற்றும் **Pre Appraisal** குறித்த தகவல்களைப் பதிவு செய்ய வேண்டும்.

## TAB பயன்பாட்டின் முக்கியத்துவம் மற்றும் வெளியூரில் உள்ள உறுப்பினர்கள் குழு கூட்டத்தில் கலந்து கொள்வதன் முக்கியத்துவம்.

- குழு உறுப்பினர்கள் குழுவாய் அமர்ந்து குழுக் கூட்டம் நடத்துவது மற்றும் ஒரு உறுப்பினர் வருடத்தில் 6 குழுக் கூட்டங்களிலாவது தனது வருகையைக் கைரேகை மூலம் உறுதிப்படுத்துதல் அவசியம்.

- குழுவின் கடன் மீதங்கள், நிறுவனத்தின் நலத் திட்டங்கள், வங்கிக்கடன் Closing போன்ற அனைத்து செயல்பாடுகளையும் உறுப்பினர்கள் அறிந்து கொண்டதை உறுதிப்படுத்தவே TAB-ல் கைரேகை வைக்கும் வழிமுறை பின்பற்றப்படுகிறது.

## ஊக்குநர் கையேடு உருவாக்கப்பட்டதின் நோக்கமும் பயன்பாடும்

- ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் ஐ.வி.டி.பி பணியாளர்களைச் சார்ந்து செயல்படாமல் தாங்களாகவே வழி நடத்திச் செல்ல உருவாக்கப்பட்ட வழித்துணையே ஊக்குநர் கையேடு.

- குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளுக்கும் மாதிரி தீர்மானப் படிவங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அதைப் பின்பற்றி குழுவில் தீர்மானங்களை நிறைவேற்றிக்கொள்ளவும்.

## இறந்த உறுப்பினர் பற்றிய தகவல்களைப் பதிவு செய்யும் வழிமுறைகள்

- குழுவிலிருந்து ஒரு உறுப்பினர் மரணமடைந்தால் உடனடியாக குழுவைச் சேர்ந்த ஊக்குநர்கள் (அ) உறுப்பினர்கள் தங்களது கிளை அலுவலகத்திற்கும், அதைத் தொடர்ந்து தலைமை அலுவலகத்திற்கும் தகவல் கொடுக்க வேண்டும். (தலைமை அலுவலக தொலைப்பேசி எண்கள் - 04343-236420, 04343-232129.
- கிளை அலுவலகப் பணியாளர்கள் மற்றும் CLF பிரதிநிதிகள் ஈமச்சடங்கில் கலந்து கொள்வார்கள்.

## பெற்றுக்கொண்ட சுகாதாரப் பொருட்களின் கடனுக்கான WITHDRAWAL ஒப்படைப்பதில் ஊக்குநருக்கானப் பொறுப்புகள்

- குழு தீர்மானம் மற்றும் ஊக்குநர், பிரதிநிதியின் கையொப்பமின்றி எந்த வித பணப்பரிவர்த்தனைகளும் குழுவில் நடைபெறாது என்பதையும், குழுவில் நடைபெறும் அனைத்து செயல்பாடுகளும் 20 உறுப்பினர்களுக்கும் சொந்தமானவை என்பதையும் ஊக்குநர்கள் மற்றும் உறுப்பினர்கள் கருத்தில் கொள்ள வேண்டும்.
- ஐ.வி.டி.பி கிளை அலுவலகங்களில் குழுக்கூட்டம் தொடர்பாகவும், சுகாதாரப் பொருட்கள் DD எடுப்பது தொடர்பாகவும் Withdrawal வழங்கும் போது மாதிரி படிவத்தில் உள்ளவாறு எந்த பொருளுக்காக Withdraw கொடுக்கப்பட்டது என்ற விவரத்தையும், எத்தனை பொருட்கள் மற்றும் எவ்வளவு தொகை என்பதையும் எழுதி கொடுப்பது ஊக்குநரின் முழு பொறுப்பாகும்.


LED Lamp - 3 Rs: 1200
தமிழ்நாடு கிராம வங்கி
TAMIL NADU GRAMA BANK
CASH WITHDRAWAL SLIP
(USABLE AT BASE BRANCH ONLY)
This Form is not a Cheque
Pass Book must accompany this form
Londonpet கிளை / Branch
தேதி / Date 2025
Pay to self / us the sum of
எனக்கு / எங்களுக்கு ரூபாய் ₹
மட்டும் கொடுக்கவும் ₹
சேமிப்பு கணக்கு எண் to the debit of my / our Bank A/c No.
1 2 3 4 5 6 7 8 9 0 0
Signature of A/c Holder
Name(s) of A/c Holder(s)
Ph.no. of A/c Holder
For Office Use
Trans. ID
Pay to Shri./Smt./Ms.
Passing officer / SWO
SWO / Paying Official

## ஐ.வி.டி.பி நிறுவனத்தில் குழுக்களை வழிநடத்துவதில் புதிதாக செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறைகள்

- புதிய குழுக்களின் கணக்கு துவங்குவதற்கு முன்பு ஊக்குநர் மற்றும் பிரதிநிதியாக தேர்வு செய்யப்பட்ட நபர்கள் ஐ.வி.டி.பி தலைமை அலுவலகம் வர வேண்டும்.
- புதிய குழுக்களின் ஊக்குநர் மற்றும் பிரதிநிதி நேரடியாக தலைமை அலுவலகத்திற்கு வருவதன் மூலம் நிறுவனத்தின் நோக்கம், குறிக்கோள், குழுவை வழிநடத்தும் முறை, கொடுக்கப்படும் பயிற்சிகள், ஊக்குநர் மற்றும் பிரதிநிதியின் பொறுப்புகள் போன்ற தகவல்களை தெளிவாக அறிந்துக் கொள்ள முடியும்.
- **உறுப்பினர் விலகல் மற்றும் குழு விலகுதல் பற்றிய தகவல்கள்**
  - குழுவோ அல்லது உறுப்பினரோ தங்கள் குழுவிலிருந்து விலகும்போது அவர்களின் சேமிப்பு (அ) அவருக்கு சேர வேண்டிய தொகை அவரது தனிநபர் சேமிப்பு கணக்கிற்கு மட்டுமே மாற்றம் செய்யப்படும்.

  விலகிய குழு உறுப்பினர்கள் மீண்டும் வேறு குழுக்களில் இணைய வாய்ப்பு

  - சூழ்நிலை காரணமாக விலகும் உறுப்பினர்கள் அருகில் உள்ள ஐ.வி.டி.பி குழுவிலோ (அ) அவர்கள் நிரந்தரமாக குடியிருக்கும் கிராமத்திலுள்ள வேறு ஐ.வி.டி.பி கிளையில் உள்ள குழுக்களிலோ, அந்த குழுக்களின் முழு சம்மதத்துடனும், தீர்மானத்துடனும் ஏற்கனவே குழுவில் இருந்த வருடங்களைக் கணக்கில் கொண்டு தற்போது உள்ள அதே சேமிப்புடன், அனைத்து வகையான கடன்களைப் பெறவும் தேவையான வழிமுறைகள் செய்து தரப்படும்.

## களப்பணியாளர்கள் குழுவில் கலந்து கொள்வதை உறுதிப்படுத்த TRACKING SYSTEM அறிமுகம்

- ஐ.வி.டி.பி நிறுவனமானது குழுக்களைத் திறம்பட செயல்படுத்துவதில் உள்ள பணியாளர்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, அவர்கள் குழுவில் கலந்து கொள்வதையும் நிறுவனத்தின் நோக்கங்களைச் செயல்படுத்துவதையும் கண்காணிக்கும் பொருட்டு Tracking system அறிமுகப்படுத்தவுள்ளது.




- அந்தந்த குழுக்களின் தீர்மானப் புத்தகத்தில் முன்பக்கம் பதிவு செய்யப்பட்டுள்ள குழுக் கூட்ட நேரம், களப்பணியாளர் கூட்டத்திற்கு வருகை புரியும் நேரத்தோடு ஒத்திருக்க வேண்டும்.
- இந்த Tracking system முறை பணியாளர்களின் ஊதியத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. குறிக்கப்பட்ட சரியான நேரத்தில் குழுவை நடத்த ஊக்குநர் மற்றும் உறுப்பினர்கள் களப்பணியாளரோடு இணைந்து முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்பதையும் அறிவுறுத்துகிறோம்.

INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION ● மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு
உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் பெண் குழந்தைகள்

# கணினிப் பயிற்சி பெற
# ஒரு அரிய வாய்ப்பு

**ஜூன் மாதம் முதல் செயல்படவுள்ளது**



## புதிய உதயம்... ஐ.வி.டி.பி கணினிப் பயிற்சி மையம்



## ஐ.வி.டி.பி சுய உதவிக் குழுக்கள் தொழிற்பயிற்சி மையம்
## சிட்கோ தொழிற்பேட்டை, கிருஷ்ணகிரி

பாடத்திட்டம், பயிற்சி காலம் மற்றும் சேர்க்கை விவரங்களுக்கு ஐ.வி.டி.பி கிளை அலுவலகங்களை அணுகவும்.






## கோட்டையூர்,
## ஐ. வி. டி. பி. நேதாஜி பள்ளிக்கு
## கல்விப் பணிகள்

ஐ. வி. டி. பி. நிறுவனர் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஐ. வி. டி. பி. நேதாஜி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி கோட்டையூர் மற்றும் அதன் சுற்றுப்புறங்களில் வாழும் மலைவாழ் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்கி வருகிறது. அப்பள்ளியில் பயிலும் ஏழை மலைவாழ் குழந்தைகளின் கல்வி மேம்பாட்டிற்காக ஐ. வி. டி. பி. நிறுவனம் கீழ்கண்ட கல்விச் சேவைகளை 2024-25 ஆண்டில் இப்பள்ளி குழந்தைகளுக்கு வழங்கியுள்ளது.

- ஒரு குடும்பத்தில் பயிலும் 2 மாணவர்களில் 1 மாணவருக்கான கட்டணமாக 134 மாணவர்களுக்கு **ரூ. 11.21 இலட்சம்** கல்வி உதவித்தொகை.
- **462** மாணவர்களுக்கு **ரூ. 1.30 இலட்சம்** மதிப்பில் பாடப்புத்தகங்கள்.
- பள்ளியின் பாதுகாப்பு நலன் கருதி **ரூ. 5.58 இலட்சம்** மதிப்பில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா
- மாணவர்கள் அமர்ந்து பயில ஏதுவாக **ரூ. 7.01 இலட்சம்** மதிப்பில் இருக்கைகள் மற்றும் டேபிள்கள்.

**இதுவரை ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த கல்விப் பணியின் மதிப்பு** **ரூ. 6.33 கோடி**



ரூ. 18.73 இலட்சம்

## கல்லூரிகளுக்கு 20 இன்ட்ராக்டிவ் போர்டுகள்

## INTERACTIVE DIGITAL DISPLAY BOARD

ஐ.வி.டி.பி நிறுவனம், மாணவர்களுக்கு தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட கற்றல் அனுபவத்தை வழங்க வேண்டும் என்ற நோக்கத்துடன், பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு நவீன கல்வி உபகரணமான இன்ட்ராக்டிவ் போர்டுகளை வழங்கி வருகிறது. இந்த போர்டுகள், மாணவர்களுக்கு பாடங்களை எளிதாக புரிந்துகொள்ள உதவுவதுடன், ஆசிரியர்களுக்கு கற்றல் முறையை வண்ணமயமாக மாற்ற உதவுகின்றன.

**2024 - 25** கல்வியாண்டில் ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக ரூ. **18.73 இலட்சம்** மதிப்பிலான **20 இன்ட்ராக்டிவ் போர்டுகள்,** கல்லூரி நிர்வாகத்தின் பங்களிப்பாக ரூ. **16.81 இலட்சம்** மதிப்பிலான **17 இன்ட்ராக்டிவ் போர்டுகள்** என மொத்தம் ரூ.**35.54 இலட்சம்** மதிப்பிலான **37 இன்ட்ராக்டிவ் போர்டுகளை** வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

| | |
|---|---|
| மெட்டாலா, இலயோலா கல்லூரிக்கு 4 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 3.84 இலட்சம் |
| கள்ளக்குறிச்சி, இமாகுலேட் மகளிர் கல்லூரிக்கு 2 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 1.92 இலட்சம் |
| திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரிக்கு 2 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 1.92 இலட்சம் |
| தருமபுரி, தொன் போஸ்கோ கல்லூரிக்கு 4 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 3.84 இலட்சம் |
| எலத்தகிரி, கொன்சாகா கல்லூரிக்கு 3 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 2.88 இலட்சம் |
| சேலம், பாகல்பட்டி, செயிண்ட் ஜோசப் கல்லூரிக்கு 2 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 1.92 இலட்சம் |
| புதுப்பாளையம், இதயா கல்லூரிக்கு 2 இன்ட்ராக்டிவ் போர்டுகள் | ரூ. 1.92 இலட்சம் |
| ஜவ்வாது மலை, தொன் போஸ்கோ மேம்பாட்டு சங்கத்திற்கு 1 இன்ட்ராக்டிவ் போர்டு | ரூ. 48 ஆயிரம் |

## கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கு ஊக்கப் பரிசுகள் ரூ. 5 இலட்சம்







கல்லூரியில் பயிலும் மாணவர்களின் கற்றல் முறையில் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில், அக்கல்லூரியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து பல வருடங்களுக்கு மேலாக தொடர்ந்து பணிபுரியும் பேராசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் **100** பேராசிரியர்களுக்கு **ரூ.5 இலட்சம்** ஊக்கப் பரிசாக வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

| | |
|---|---|
| நாமக்கல், பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரியின் 40 பேராசிரியர்களுக்கு | ரூ. 2,00,000/- |
| கள்ளக்குறிச்சி, இமாகுலேட் மகளிர் கல்லூரியின் 60 பேராசிரியர்களுக்கு | ரூ. 3,00,000/- |

**இதுவரை பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களின் பணியைப் பாராட்டி ஐ.வி.டி.பி வழங்கிய மொத்தத் தொகை** **ரூ. 1.07 கோடி**

## நாமக்கல், பான்செக்கர்ஸ் கல்லூரி மாணவியருக்கு ஊக்கத்தொகை ரூ. 2 இலட்சம்




கல்லூரியில் பயிலும் மாணவர்கள் குழுவாக இணைந்து தங்கள் கல்லூரியின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கும் வகையிலும், அப்பகுதியைச் சார்ந்த பெண்களுக்கு கல்விச் செல்வம் கிடைக்கும் நோக்கிலும் கல்லூரியில் புதிய மாணவியரை சேர்த்து வரும் மாணவியரை ஊக்கப்படுத்தும் வகையில் **89 மாணவிகளுக்கு ரூ.2 இலட்சத்தை** கல்வி உதவித் தொகையாக ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் வழங்கினார்.

பெற்றோர்களை இழந்த மற்றும் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும்

**2099 கல்லூரி மாணவ மாணவியருக்கு ரூ.1.64 கோடி**

ஐ.வி.டி.பி

# உயர் கல்வி உதவித் தொகை















ஐ.வி.டி.பி யின் கல்விப் பணிகளில் முதன்மையானது பெற்றோரை இழந்த கல்லூரி மாணவ மாணவியருக்கு உயர் கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டமாகும். அவ்வகையில் பெற்றோர் இருவரையும் இழந்த மாணவர்களுக்கு தலா ரூ.10,000/- மும், பெற்றோரில் ஒருவரை இழந்த மாணவர்களுக்கு தலா ரூ.7,500/- என வழங்கி வருவதோடு, வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக சிறப்பு கல்வி உதவித்தொகையாக தலா ரூ.7500/- என கல்வி உதவித்தொகைகளை வழங்கி வருகிறது ஐ.வி.டி.பி நிறுவனம். அதன்படி கீழ்காணும் கல்லூரிகளைச் சார்ந்த **2099 மாணவ மாணவியருக்கு ரூ. 1.64 கோடி** மதிப்பிலான கல்வி உதவித்தொகையை வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

| வ எண் | கல்லூரியின் பெயர் | பெற்றோரை இழந்த மாணவர்களின் எண்ணிக்கை | வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் ஏழை மாணவர்களின் எண்ணிக்கை | கல்வி உதவித்தொகையின் மதிப்பு |
|---|---|---|---|---|
| 1. | திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி | 139 | 138 | ரூ. 19.7 இலட்சம் |
| 2. | வேலூர் அக்சீலியம் கல்லூரி | 117 | - | ரூ. 8.88 இலட்சம் |
| 3. | பாகல்பட்டி, செயின்ட் ஜோசப் கல்லூரி | 11 | 89 | ரூ. 7.49 இலட்சம் |
| 4. | ஒசூர் செயின்ட் ஜோசப் கல்லூரி | 73 | 104 | ரூ. 13.35 இலட்சம் |
| 5. | வேட்டவலம், இலயோலா கல்லூரி | 17 | 161 | ரூ. 14.28 இலட்சம் |
| 6. | மெட்டாலா, இலயோலா கல்லூரி | 46 | 116 | ரூ. 12.18 இலட்சம் |
| 7. | எலத்தகிரி, கொன்சாகா கல்லூரி | 42 | 159 | ரூ. 15.37 இலட்சம் |
| 8. | ஏலகிரி, தொன் போஸ்கோ கல்லூரி | 51 | 54 | ரூ. 8.08 இலட்சம் |
| 9. | நாமக்கல், பான்செக்கர்ஸ் மகளிர் கல்லூரி | 52 | 33 | ரூ. 6.54 இலட்சம் |
| 10. | கள்ளக்குறிச்சி, இமாகுலேட் மகளிர் கல்லூரி | 39 | 94 | ரூ. 10.02 இலட்சம் |
| 11. | புதுப்பாளையம், இதயா கல்லூரி | 59 | 51 | ரூ. 7.93 இலட்சம் |
| 12. | தருமபுரி தொன் போஸ்கோ கல்லூரி | 62 | 39 | ரூ. 7.12 இலட்சம் |
| 13. | சேலம் ஜெயராணி கல்லூரி | 11 | 88 | ரூ. 7.67 இலட்சம் |
| 14. | தருமபுரி தொன் போஸ்கோ கல்வியியல் கல்லூரி | 10 | - | ரூ. 1 இலட்சம் |
| 15. | திருப்பூர் செயின்ட் ஜோசப் கல்லூரி | - | 100 | ரூ. 7.67 இலட்சம் |
| 16. | அருணாசலப் பிரதேச ஆஷா தொண்டு நிறுவனம் | - | 12 | ரூ. 1.2 இலட்சம் |
| 17. | தேவியாக்குறிச்சி தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் குழந்தைகள் | - | 4 | ரூ. 40 ஆயிரம் |
| 18. | சேலம் தூய மரியன்னை நர்சிங் கல்லூரி | - | 21 | ரூ. 1.57 இலட்சம் |
| 19. | பர்கூர் செயின்ட் ஜோசப் சமூக நல மையம் | - | 39 | ரூ. 3.7 இலட்சம் |
| 20. | புதுக்கோட்டை, தொன் போஸ்கோ இளைஞர் கிராமம் | | 40 | ரூ. 4 இலட்சம் |
| 21. | பிற கல்லூரிகளில் பயிலும் ஏழை மாணவர்கள் | 28 | - | ரூ. 5.86 இலட்சம் |
| | **மொத்தம்** | **757** | **1342** | **ரூ. 1.64 கோடி** |

**இதுவரை ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய மொத்த உயர்கல்வி உதவித் தொகை**

**ரூ. 8.87 கோடி**

## பர்கூர் CSI மலைவாழ் குழந்தைகள் பள்ளிக்கு சுற்றுச்சுவர்

ரூ. 3.93 இலட்சம்



பர்கூரில் இயங்கி வரும் CSI மலைவாழ் குழந்தைகள் பள்ளியில் ஏறத்தாழ 190 மாணவர்கள் கல்வி பயின்று வருகின்றனர். அப்பள்ளியில் பயிலும் மாணவர்களின் பாதுகாப்பு நலன் கருதி, அப்பள்ளி வளாகத்திற்கு **ரூ. 3.93 இலட்சம்** மதிப்பிலான சுற்றுச்சுவரைக் கட்டி வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

## தேசிய அளவில் தேர்வான கால்பந்து விளையாட்டு வீராங்கனைகளுக்கு தங்க நாணயம்

ரூ. 1.19 இலட்சம்

சேலம் மாவட்டம், AN மங்கலம் பகுதியில் செயல்பட்டு வரும் தூய மரியன்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் மாணவிகள் 19 வயத்துக்குட்பட்டோருக்கான தேசிய அளவிலான கால்பந்து போட்டிக்கு தேர்வானதைப் பாராட்டும் வகையில் 17 மாணவிகளுக்கு தலா **ரூ.7050/-** என மொத்தம் **ரூ.1.19 இலட்சம்** மதிப்பிலாக தங்க நாணயங்களை வழங்கினார் ஐ.விடி.பி நிறுவனத் தலைவர்.



இப்பள்ளியின் கல்வி வளர்ச்சிக்காக **ரூ. 29.8** இலட்சத்தை ஐ.வி.டி.பி மூலம் வழங்கப்பட்டது.

## கிருஷ்ணகிரி அரசு நடுநிலைப் பள்ளிக்கு டெஸ்க் பென்ச்கள் மற்றும் சானிட்டரி நாப்கின் எரியூட்டும் இயந்திரம்

ரூ. 46 ஆயிரம்






கிருஷ்ணகிரியில் இராசி வீதியில் செயல்படும் அரசு நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் அமர்ந்து பயில்வதற்கு ஏதுவாக **ரூ. 35,400/-** மதிப்பிலான 10 டெஸ்க் பென்ச்கள் மற்றும் அப்பள்ளியில் பயிலும் மாணவியரின் நலன் கருதி **ரூ.11,210/-** மதிப்பிலான சானிட்டரி நாப்கின் எரியூட்டும் இயந்திரத்தை வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

கல்லூரியில் பயிலும் 1780 மாணவியருக்கு

# சீருடைகள்

ரூ.10.33 இலட்சம்



கல்வி என்பது எதையும் எதிர்கொள்ளும் சக்தியை வழங்கும் மிகவும் அற்புதமான ஆயுதம். அத்தகைய கல்வி பயணத்தை உற்சாகப்படுத்தும் விதமாகவும், மனைவியரிடையே வகுப்பறையில் பாகுபாடற்ற சமநிலையை உருவாக்கும் வகையிலும் **1780 கல்லூரி மாணவியருக்கு ரூ.10.33 இலட்சம்** மதிப்பிலான கல்லூரி சீருடைகளை வழங்கி உதவியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

| | |
|---|---|
| கிருஷ்ணகிரி, அரசு மகளிர் கலைக் கல்லூரியின் 850 மாணவியருக்கு | ரூ. 5,70,780/- |
| பாகல்பட்டி, செயின்ட் ஜோசப் கல்லூரியின் 450 மாணவியருக்கு | ரூ. 2,00,475/- |
| புதுப்பாளையம், இதயா கல்லூரியின் 480 மாணவியருக்கு | ரூ. 2,62,440/- |

இதுவரை கல்லூரி மாணவியரின் சீருடைக்காக ஐ.வி.டி.பி வழங்கியத் தொகை

ரூ. 50.91 இலட்சம்

# மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு உணவு

ரூ. 47 ஆயிரம்

மாற்றுத்திறனாளிகள் தின விழாவை முன்னிட்டு, பர்கூரில் உள்ள ஐ.இ.எல்.சி பார்வையற்றோருக்கான சிறப்புப் பள்ளியில் பயிலும் 500 மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு **ரூ.47,250/-** மதிப்பில் உணவினை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு

# இனிப்பு மற்றும் கேக்குகள் ரூ.9.68 இலட்சம்

ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் பள்ளி மாணவ மாணவியரை மகிழ்ச்சிப்படுத்தும் வகையில் இவ்வருடத்தில் **15600 மாணவர்கள்** மற்றும் உறுப்பினர்களுக்கு **ரூ.9.68 இலட்சம்** மதிப்பிலான இனிப்புகள் மற்றும் கேக்குகளை வழங்கியது.





கிருஷ்ணகிரி புனித அன்னாள் ஆரம்பப்பள்ளியின்
**1172 மாணவிகளுக்கு ரூ.47 ஆயிரம்**

கிருஷ்ணகிரி புனித அன்னாள் மேல்நிலைப் பள்ளியின் **2130 மாணவிகளுக்கு ரூ. 85 ஆயிரம்**

கிருஷ்ணகிரி புனித அன்னாள் பப்ளிக் பள்ளியின்
**480 மாணவர்களுக்கு ரூ.20 ஆயிரம்**

கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளியின்
**462 மாணவர்களுக்கு ரூ. 25 ஆயிரம்**

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியின்
**2150 மாணவர்களுக்கு ரூ. 86 ஆயிரம்**

மெட்டாலா, இலயோலா கல்லூரியின்
**950 மாணவ மாணவியருக்கு ரூ. 45 ஆயிரம்**

வடுகம்பட்டி ஹோலிகிராஸ் மேல்நிலைப் பள்ளியின்
**1700 மாணவ மாணவியருக்கு ரூ. 73 ஆயிரம்**

ஜவ்வாது மலை தொன் போஸ்கோ மேம்பாட்டு சங்கத்தின் **200 நபர்களுக்கு ரூ. 10 ஆயிரம்**

புதுப்பாளையம் இதயா கல்லூரியின்
**600 மாணவியருக்கு ரூ. 30 ஆயிரம்**

கோசலை விருது வழங்கும் விழாவில்
**2750 நபர்களுக்கு ரூ.1.10 இலட்சம்**

வாழ்க்கைப் பாதுகாப்பு நிதியுதவி வழங்கும் விழாவில் **2450 நபர்களுக்கு ரூ.96 ஆயிரம்**

கணவரை இழந்த உறுப்பினரின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை வழங்கும் விழாவில்
**600 நபர்களுக்கு ரூ.28 ஆயிரம்**

தீபாவளி பரிசாக பெங்களூர், செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனை பணியாளர்களுக்கு **ரூ.2.85 இலட்சம்**

இதுவரை கேக் மற்றும் இனிப்புகள் வழங்கியதற்காக ஐ.வி.டி.பி நிறுவனம் செலவிட்டத் தொகை

**ரூ.15.68 இலட்சம்**



**மும்பை அலர்ட் இந்தியா தொழுநோய் நிவாரண நிறுவனத்தின் பணியாளர்களுக்கு**

## ஒரு மாத ஊதியம் மற்றும் ஊக்கத்தொகை

**ரூ. 20.80 இலட்சம்**

மும்பையைச் சார்ந்த அலர்ட் இந்தியா நிறுவனத்தின் பணியாளர்கள் அன்றாட வாழ்வில் பெரும்பான்மையான நேரத்தை தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் நல்வாழ்விற்காக அர்ப்பணித்து வருகின்றனர். அச்செயலைப் பாராட்டி ஊக்குவிக்கும் வகையில் அந்நிறுவனத்தைச் சார்ந்த 61 பணியாளர்களுக்கு ஒரு மாத ஊதியமாக **ரூ. 14 இலட்சம்,** தொடந்து 20 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றிய **36 பணியாளர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 3.6 இலட்சம் மற்றும் ரூ.3.19 இலட்சம் மதிப்பிலான தங்க நாணயங்களை** ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு. குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி ஊக்கப்படுத்தினார்.

**இதுவரை ஐ.வி.டி.பி நிறுவனம், மும்பை அலர்ட் இந்தியா தொழுநோய் நிவாரண நிறுவனத்திற்கு வழங்கிய மொத்தத் தொகை**

**ரூ. 1.02 கோடி**



### தொழு நோய் ஒழிப்பதில் தன்னலமற்ற தமிழர்

### திரு. அந்தோணிசாமி

நிறுவனர் – அலெர்ட் இந்தியா, மும்பை.

தமிழ்நாட்டின் தஞ்சை மாவட்டத்தில் பிறந்து மகாராஷ்ட்ரா மாநிலத்தில் தொழு நோயில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சேவையாற்றும் நோக்கில் கடந்த 45 ஆண்டுகளுக்கு முன் மும்பை மாநகரில் அலெர்ட் இந்தியா தொண்டு நிறுவனத்தை துவங்கி தொழு நோய் குறித்த விழிப்புணர்வு, தடுத்தல் சிகிச்சை மற்றும் மறுவாழ்வு பணிகளை இன்றளவும் அயராது மேற்கொண்டு வரும் திரு. அந்தோணிசாமி அவர்களின் பணியை பாராட்டி 8 கிராம் தங்கப்பதக்கம் வழங்கி கௌரவித்தார் ஐ.வி.டி.பி தலைவர்

**கிருஷ்ணகிரி**

நகர மக்களின்

பாதுகாப்பு நலன் கருதி

# சிசிடிவி கண்காணிப்பு கேமரா



**ரூ. 6.37 இலட்சம்**

கிருஷ்ணகிரி நகரம் மற்றும் அதன் சுற்று வட்டாரங்களில் பொது மக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் பல்வேறு பகுதிகளில் சிசிடிவி கண்காணிப்பு கேமரா அமைப்புகள் நிறுவப்பட்டால் நன்றாக இருக்கும் என கிருஷ்ணகிரி மாவட்டக் காவல்துறையினர் விடுத்த கோரிக்கையை ஏற்று, ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் **ரூ.6,37,015/-** மதிப்பிலான **58 சிசிடிவி கேமராக்களை** நகரின் 15 முக்கிய இடங்களில் நிறுவி உதவினார். இந்த முயற்சி நகரில் குற்றங்களை தடுக்க உதவுகிறது என்பதில் ஐயமில்லை.




நகரில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கேமராவின் சில காட்சிகள்

**இதுவரை கிருஷ்ணகிரி நகராட்சி மற்றும் காவல்துறைக்கு CCTV CAMERA வழங்கியதற்கு ஐ.வி.டி.பி செலவிட்டத் தொகை**

**ரூ.16.37 இலட்சம்**

# சேசுராஜபுரம் மார்னிங் ஸ்டார் சுகாதார மையத்திற்கு மருத்துவ உபகரணங்கள்

அஞ்செட்டி வட்டம், வனப்பகுதியின் நடுவே அமைந்துள்ள சேசுராஜபுரம் கிராமத்தில் செயல்படும் **மார்னிங் ஸ்டார்** சுகாதார மையத்தை மேம்படுத்தும் நோக்கத்துடன் **ரூ.3,30,400/-** மதிப்பிலான ஆய்வகத்திற்கு தேவையான இரத்த பரிசோதனை கருவியை வழங்கி உதவியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



**ரூ. 3.30 இலட்சம்**

# ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு முக சீரமைப்பு மருத்துவச் சிகிச்சை

**ரூ. 6 இலட்சம்**

" ஒரு முகத்தில் சிரிப்பு இருந்தால் மட்டுமே
அந்த உள்ளத்தில் நம்பிக்கை இருக்கும் '

அங்ஙனம் ஐ.வி.டி.பி உறுப்பினர்களின் முகத்தில் சிரிப்பையும், அவர்கள் மனதில் நம்பிக்கையையும் கொணரும் வண்ணம், எதிர்பாராத வகையில் விபத்து மற்றும் பிற காரணங்களால் பாதிப்படைந்த உறுப்பினர்களுக்கு மருத்துவ உதவிகளை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.



திருப்பத்தூர் கிளை, பத்ம ஸ்ரீ மகளிர் மன்றத்தைச் சார்ந்த திருமதி. **பெருமா முருகன்** அவர்களுக்கு உதடு பிளவு சரிசெய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்டது.



மத்தூர் கிளை, பனித்துளி மகளிர் மன்றத்தைச் சார்ந்த உறுப்பினர் திருமதி. **செல்வி முருகன்** அவர்களுக்கு தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கழுத்து மற்றும் முகத் தசை சிதைவு சீரமைக்கப்பட்டது.

## ஐ.வி.டி.பி உறுப்பினர்களின் கனவு இல்லத்திற்கு ஐ.வி.டி.பி யின் பங்களிப்பு

ரூ. 4.5 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம் சொந்த வீடு கட்டும் கனவில், வீடில்லாமல் தவிக்கும் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்களின் சொந்த இல்லம் என்ற கனவை நனவாக்கும் வண்ணம், ஏழை உறுப்பினர்களுக்கு வீடு கட்டும் திட்டத்திற்கு உதவி வருகிறது. அவ்வகையில் **3 உறுப்பினர்களுக்கு** இந்த வருடம் **ரூ. 4.5 இலட்சம்** உதவித்தொகையாக ஐ.வி.டி.பி நிறுவனத்தால் வழங்கப்பட்டது.

கிருஷ்ணகிரி கிளை, ஸ்ரீ ராம ஜெயம் மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த திருமதி. தேவி எனும் உறுப்பினர்க்கு

**ரூ. 2,00,000/-**



நாட்றாம்பாளையம் கிளை, மங்கை மகளிர் சுய உதவிக்குழுவைச் சார்ந்த திருமதி. செபாஸ்டினா எனும் உறுப்பினர்க்கு

**ரூ. 2,00,000/-**

நாட்றாம்பாளையம் கிளை, அந்தோனியார் மகளிர் சுய உதவிக் குழுவைச் சார்ந்த திருமதி. சித்தேரியம்மாள் எனும் உறுப்பினர்க்கு

**ரூ. 50,000/-**

இதுவரை ஏழை உறுப்பினர்கள் வீடு கட்டும் திட்டத்திற்காக **ஐ.வி.டி.பி செலவிட்டத் தொகை** **ரூ. 7.3 இலட்சம்**

## ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுவின் 17 உறுப்பினர்களுக்கு

# வெள்ள நிவாரண உதவி

₹ 4.62 இலட்சம்



கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரையின் பல பகுதிகளில் பெரும் மழை வெள்ளம் சூழ்ந்ததால், ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்கள் தங்கள் வீடுகளை இழந்து, உணவிற்கு வழியின்றி பெரும் இன்னலுக்கு ஆளாகினர். அவ்வாறு பாதிக்கப்பட்ட ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுவின் **17 உறுப்பினர்களுக்கு ரூ.4.62 இலட்சம் மதிப்பிலான பாத்திரம், உடைகள், பெட்ஷிட், பாய், தலையணை, தார்ப்பாய், உணவு, சோலார்விளக்கு, அரிசி** போன்றவற்றை வழங்கி தன் உதவிக்கரத்தை நீட்டியது ஐ.வி.டி.பி. நிறுவனம்.

இதுவரை ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட மொத்த வெள்ள நிவாரண நிதி

**ரூ. 19.46 இலட்சம்**




# Bella Sensitive Intimate Wash
# பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ்

பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ் பெண்களின் பிறப்புறுப்பு பகுதியை சுத்தம் செய்ய பயன்படுத்தப்படுகிறது. அனைத்து வயது பெண்களும் இதைப் பயன்படுத்தலாம். பிறப்புறுப்பு பகுதிகளில் ஏற்படும் வறட்சி மற்றும் நோய்த்தாக்கம் ஆகிய அறிகுறிகள் உள்ளவர்கள் இதைப் பயன்படுத்துவது பாதுகாப்பானது.

## பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ் பயன்கள் :

1. மென்மையான, திரவ வடிவிலான பெல்லா சென்சிடிவ் வாஷ் பிறப்புறுப்பின் சுகாதாரத்தைப் பராமரிக்க உதவும் திரவமாகும்.

   a )பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ் PH அளவை நிலைப்படுத்துவதால் இயற்கையாக உருவாகும் லாக்டிக் அமிலத்தை பாதிக்காது.

   b )இதில் உள்ள D பெந்தனால் எனும் மூலக்கூறு சருமத்திற்கு எத்தீங்கும் விளைவிக்காமல் சருமம் சீராக இருக்க உதவுகிறது.

   c )லாக்டிக் அமிலம் எரிச்சல், அரிப்பு போன்றவற்றிற்கு காரணமான பாக்டீரியாவிற்கு எதிராக செயல்பட்டு பிறப்புறுப்பைப் பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

   d )பிறப்புறுப்பு நோய், அரிப்பு, எரிச்சல் போன்றவற்றை தடுக்க தோல் நோய் நிபுணர்களால் பரிசோதிக்கப்பட்டு, மகப்பேறு மருத்துவர்களால் பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ் பரிந்துரைக்கப்படுகிறது.

2. பூப்பெய்திய (வயதிற்கு வந்த) சிறுமிகள் முதல் வயதானப் பெண்கள் வரை அனைவரும் பயன்படுத்தலாம். எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படுத்தாது.

3. ஆண்களும் இதை பயன்படுத்தலாம்.

4. கர்ப்பக் காலங்களிலும், மாதவிடாய் காலங்களிலும் கூட இத்திரவத்தைப் பயன்படுத்தலாம்.

## உபயோகிக்கும் முறை



முதலில் பிறப்புறுப்பு பகுதியை தண்ணீரால் கழுவவும்.



உள்ளங்கையில் சிறிதளவு பெல்லா சென்சிடிவ் இன்டிமேட் வாஷ் எடுத்துக் கொண்டு பிறப்புறுப்பு பகுதியில் தடவவும். (தண்ணீரில் கரைத்து கழுவக்கூடாது.)



பிறகு சுத்தமான தண்ணீரில் நன்கு கழுவவும்.(சோப்பு அல்லது இதர ஜெல் பயன்படுத்த தேவையில்லை)

ஒரு நாளில் காலை மற்றும் மாலை என இருவேளை பயன்படுத்தினால் போதுமானது.

**300ml Pack-ன் அதிகபட்ச விற்பனை விலை Rs.299/-**
**ஐ.வி.டி.பி உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சலுகை விலை : Rs.200/-**

## ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விவரம் ( மார்ச் 2025 வரை )

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள்: கிருஷ்ணகிரி, தர்மபுரி. திருப்பத்தூர் & வேலூர்

ஐ.வி.டி.பி.கிளைகள் : **89** சுயஉதவிக்குழுக்கள்: **15,384**

சுய உதவிக்குழு உறுப்பினர்கள்: **2,61,528**

ஐ.வி.டி.பி.குழுக்களின் மொத்த சேமிப்பு : **ரூ. 1542.35** கோடி

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு: **ரூ. 1005.41** கோடி

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2024 வரை | ஏப்ரல் 2024-மார்ச்-2025 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ரூ. 7389.81 கோடி | ரூ. 1212.83 கோடி | ரூ. 8602.64 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ரூ. 4779.78 கோடி | ரூ. 334.53 கோடி | ரூ. 5114.31 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ரூ. 356.54 கோடி | ரூ. 74.80 கோடி | ரூ. 431.34 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ரூ. 259.10 கோடி | ரூ. 15.96 கோடி | ரூ. 275.06 கோடி |
| **மொத்தம்** | ரூ. 12785.23 கோடி | ரூ. 1638.12 கோடி | ரூ. 14423.35 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2024 வரை | ஏப்ரல் 2024-மார்ச் 2025 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம். நாட்றாம்பாளையம். தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ரூ. 5.00 கோடி | - | ரூ. 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ரூ. 2.00 கோடி | - | ரூ. 2.00 கோடி |
| மருத்துவமனை. சிறைகள் தொழுநோயாளிகள். முதியோர் இல்லம், கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ரூ. 3.16 கோடி | ரூ. 29.83 இலட்சம் | ரூ. 3.46 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ரூ. 61.13 கோடி | ரூ. 7.30 கோடி | ரூ. 68.43 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள்: குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குனர் பரிசு, ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள். தையல் பயிற்சிகள், வெள்ள நிவாரணப்பணி. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ரூ. 10 கோடி | ரூ. 1.42 கோடி | ரூ. 11.42 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு, உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ரூ. 9.01 கோடி | ரூ. 74.04 இலட்சம் | ரூ. 9.75 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி. கோட்டையூர், ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ரூ. 17.07 கோடி | ரூ. 30.87 இலட்சம் | ரூ. 17.38 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை, இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ரூ. 23.57 கோடி | ரூ. 2.26 கோடி | ரூ. 25.83 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ரூ. 57.94 இலட்சம் | - | ரூ. 57.94 இலட்சம் |
| கார்கில் போர், குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல், கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி & சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ரூ. 4.91 கோடி | - | ரூ. 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ரூ. 3.72 கோடி | - | ரூ. 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ரூ. 1.22 கோடி | - | ரூ. 1.22 கோடி |
| ஐ.வி.டி.பி. உறுப்பினர்களின் புற்றுநோய் பரிசோதனை மற்றும் மருத்துவச் சிகிச்சைக்காக | ரூ. 2.61 கோடி | ரூ. 4.85 கோடி | ரூ. 7.46 கோடி |
| **மொத்தம்** | ரூ. 143.97 கோடி | ரூ. 17.18 கோடி | ரூ. 161.15 கோடி |


INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT I.V.D.P TOWARDS TRANSFORMATION மாற்றத்தை நோக்கி (Regd. No. 69/79)

**ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்**

கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்

ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ சாந்தி நகர் 3 வது கிராஸ். கிருஷ்ணகிரி-635 001.

Ph: 04343-232 129, 236 420 e-mail: francis@ivdpkrishnagiri.org Web: www.ivdpkrishnagiri.org